பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 10 புதன்கிழமை 26.07.2023 கதிர் 257

# ஏமாற்று வித்தையாகிவிடக்கூடாது ஜனாதிபதியின் இன்றைய கூட்டம்

## அப்படி நடந்தால் வெளியேறுவோம் என்கிறார் சஜித்



'ஜனாதிபதியுடனான சர்வகட்சிக் கலந் துரையாடலில் நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி பங்கேற்றாலும், இந்தக் கலந்துரையாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில் அந்நிமிடமே குறித்த இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசியல் ஏமாற்று வித்தைகள் இல்லா மல் சரியான முறையில் கலந்துரையாட லுக்கு ஜனாதிபதியும் அரசும் வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் பிபில மெதகம தேசிய பாடசாலைக்கு பஸ் வழங்கும் நிகழ்வில் நேற்று (25) கலந்து கொண்டு உரையாற்றும்போதே ☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற துணைவேந்தர் தெரிவுக்கான பேரவைக் கூட்டத்தின் பின்னர் அதில் போட்டியிட்ட இருவர் பேரவை உறுப்பினர்கள் சிலருக்கு விருந்து வைத்தனர் என்றும் துணைவேந்தர் தெரிவின்போது ஜனாதிபதி இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் உண்மையானதா இல்லையா என்பது தெரியாது. ஆனால் ஒரு வேட்பாளரின் பெயரில் எழுதப்பட்டுள்ள இந்தக் கடிதம் கற்றறிந்தோர் வட்டாரங்களில் தீவிரமாகச் சுற்றி வருகின்றது.

எந்த போட்டியாளரின் பெயரில் கடிதம் எழுதப்பட்டதோ அவரின் ஒப்பம் அந்தக் கடிதத்தில் பல இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அது அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரின் ஒப்பம் இல்லை என்று உறுதிப்படுத்த முடிகின்றது. வேட்பாளரே அல்லாத பேராசிரியர் ஒருவரே அதனை எழுதியிருக்கிறார் என்று தகவல்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவில் இவ்வாறு ☞2

## இன்றைய கூட்டத்தில் மலையகக் கட்சிகள் நிச்சயம் பங்கேற்கும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று மாலை நடைபெறவுள்ள சர்வகட்சிக் கூட்டத்தில் மலையகக் கட்சிகளும் பங்கேற்கவுள்ளன.

தேசிய நல்லிணக்க வேலைத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநி ☞2

## குட்டிமணி, தங்கத்துரை நினைவுநாள் அனுஷ்டிப்பு

கறுப்பு ஜூலை இனக் கலவரத்தின்போது வெலிக் கடைச் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்ட ரெலோ அமைப்பின் தலைவர்களான குட்டிமணி என்று அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன் மற்றும் நடராஜா தங்கத்துரை உள்ளிட்டவர்களின் 40ஆவது நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ரெலோ கட்சியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் யாழ். மாவட்டம், வடமராட்சி, வல்வெட்டித்துறையில் இடம்பெற்றது. ஜூலை 24 இரவு தமிழர்களுக்குஎதிரான இனக் கலவரம் தொடங்கியதைத் தொடர்ந்து வெலிக் கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களான தமிழ்க் கைதிகள் 53 பேர் சிறையில் இருந்த சிங்களக் கைதிகளால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டார்கள். அதிகாரிகள் முன்பாகவே இந்தக் கொலைகள் இடம்பெற்றன என்ற போதும் அதனைத் தடுக்க அவர்கள் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. சிங்களக் கைதிகள் இந்தக் கொலைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக தமிழ்க் கைதிகள் இருந்த சிறைக் கூண்டுகளைத் திறந்துவிட்டு அதிகாரிகள் உதவினார்கள் என்றும் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

## மட்டு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் மீது எம்.பிக்கள் பாய்ச்சல்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்ற நடந்தது, அதில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைத் தாக்கிப் பேசிய மத்தியசுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அகமட், கூட்டத்தில் இருந்த நாடாளுமன்றஉறுப்பினர்களின் கடும் கண்டனத்திற்கு ஆளானார்.

இந்தஅபிவிருத்திக்குழுக் கூட்டம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தின் இடையே நிகழ்ச்சிநிரலில் காணப்படாத விடயங்கள் குறித்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேள்வி எழுப்பினார் அமைச்சர்

நஸீர். அமைச்சர் கேட்ட தரவுகள் உடனடியாகத் தன்வசம் இல்லை என்று தெரிவித்த செயலாளர். மாலைக்குள் அவை அமைச்சரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

செயலாளரின் பதிலை ஏற்றுக்கொள்ளாத அமைச்சர், அவரைக் காரசாரமாகத் திட்டினார். குறுக்கிட்ட ஆளுநர், இல்லாத தரவுகளை உடனடியாக எவ்வாறு வழங்கமுடியும் என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பியதுடன், மாலைக்குள் அவற்றை அமைச்சருக்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறு செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். இருப்பினும், அமைச்சர் அவ்விடயம் தொடர்பில் செயலாளர் மீது தொடர்ந்தும் விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டே இருந்தார்.

இதனையடுத்து, அக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அபிவிருத்திக் குழுத் தலைவர் சி.சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரன், இரா.சாணக்கியன் ஆகியோரும், நிகழ்ச்சி நிரலுக்கு உட்படாத விடயங்கள் தொடர்பான தரவுகளைக் கேட்டு ☞2

## முழு அடைப்புக்கு பல்கலை மாணவர் முழு அளவில் ஆதரவு




முல்லைத்தீவு-கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி ஜூலை 28 நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்திற்கும் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள முழு அடைப்புக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து மாணவர் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித் ☞2

### 13ஆம் திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்படும்

## பொலிஸ் அதிகாரங்களை எதிர்ப்போருக்கு வாய்ப்பை வழங்கவே சர்வ கட்சி மாநாடு

### ரணிலின் நோக்கத்தைப் போட்டுடைக்கிறார் சிறீகாந்தா

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடாத்தியே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்க்கும் சகல தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கும், அவர்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்கான நல்லதோர் சந்தர்ப்பத்தை இந்தப் பேச்சு வழங்கப் போகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான ந.சிறீகாந்தா. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளார். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

இதுகுறித்து நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே சிறீகாந்தா இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

பேச்சுகளில் எழப்போகும் எதிர்ப்புக்களை காரணம் காட்டி, இந்த விடயம் கைவிடப்படலாம் அல்லது கணிசமான காலத்திற்கு ஒத்திவைக்கப்படலாம். இல்லையேல், பொலிஸ் அதிகாரங் ☞2

## வரி செலுத்துவதை தவிர்க்கக்கூடாது

### வடக்கு ஆளுநர் அறிவுறுத்து



அரசால் வழங்கப்படுகின்ற சேவைகளை சீராக்க கொண்டுசெல்ல வேண்டும் என்றால் மக்கள் வரி செலுத்துவதை தவிக்கக்கூடாது என வலியுறுத்தியுள்ள வடக்கின் ஆளுனர் திருமதி சார்ளஸ் வரியை ☞2

## பாப்பரசரின் பிரதிநிதி நல்லூரில் நேற்று வழிபாடு



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள வத்திக்கானின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பிறைன் உடக்குவே நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு நேரில் சென்று வழிபட்டார்.

பாப்பரசரின் பிரதிநிதியான பிறைன் உடக்குவே யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் ஜெபரட்ணம் மற்றும் அருட்தந்தை ரொஷான் ஆகியோருடன் அவர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று ☞2

# 13ஐ நீக்கி 22 வந்தால் நாடு பாதாளத்துள் தள்ளப்படும்

## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

இலங்கையில் நடைமுறையில் உள்ளது என்று சொல்லப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கி இலங்கையின் அரசமைப்பில் 22ஆவது திருத்தத்தைக் கொண்டுவர இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டித்திருக்கும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் அப்படி நடந்தால் இந்த நாடு அதளபாதாளத்திற்குள் தள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றஉறுப்பினர் உதயகம்மன்பில ஒருகருத்தை வெளியிட்டிருக்கிறார். இலங்கையில் நடைமுறையில் இருக்கும் என்று சொல்லப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாகநீக்கி இலங்கையின் அரசமைப்பில் 22ஆவது திருத்தத்தைக் கொண்டுவர இருப்பதாக ☞2

## இனி இது .....

மொட்டைக் கடிதங்கள் எழுதுவது ஒன்றும் புதிய விடயமல்ல. முன்னர் பேராசிரியர் சண்முகலிங்கம் துணை வேந்தராகத் தெரிவானபோதும் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தேர்வானபோதும் இத்தகைய மொட்டைக் கடிதங்கள் சுற்றுக்கு விடப்பட்டன. பல குற்றச்சாட்டுக்களை அடுக்கி இப்படி சுற்றறிக்கைகள் விடப்படுவது அங்கு வழமை.

அதிகம் கற்றவர்கள் உள்ள இடம் என்பதால் இவ்வாறான "அதி புத்திசாலி" நடவடிக்கைகள் மூலம் துணைவேந்தர் தெரிவில் தாங்களும் தாக்கம் செலுத்த முடியும் என்று பலர் அங்கு சிந்திக்கிறார்கள்.

கடந்த காலங்களில் இவ்வாறு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதங்களை, முன்னகர்த்துகின்றோம் என்கிற ஒரு சிறு குறிப்புடன் பல்கலைக்கழகங்களின் ஆணைக்குழுவிற்கு அனுப்பியது. ஆணைக்குழுவோ அந்தந்தப் பல்கலைக் கழகமே இது போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும் என்று தெரிவித்துவிட்டது.

இன்னும் சொல்லப்போனால் இவ்வாறு யாருக்கு எதிராக மொட்டைக் கடதாசிகள் எழுதப்பட்டனவோ அவர்களே பின்னர் துணை வேந்தர்களாக நியமிக்கப்பட்டும் இருக்கிறார்கள் என்பதே உண்மை. எனவே இதுபோன்ற கடிதங்களை எழுதும் "அதி புத்திசாலிகள்" நடைமுறை அறிவைக் கொஞ்சம் விரிவாக்கிக் கொள்வது அவர்களுக்கும் மாணவர் சமூகத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசஅதிகாரிகளை தொந்தரவுக்கு உட்படுத்துவது நாகரிகமற்ற செயல் என்று அமைச்சரின் செயலை விமர்சித்தனர். அமைச்சர் வேண்டுமென்றே அப்படிச் செய்கின்றார் என்று குற்றஞ்சாட்டினர்.

அந்தத் தரவுகளை வழங்க செயலாளருக்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினர்..

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆளுநர் செந்தில் தொண்டமான், இவ்வாறான கூட்டங்களில் அனைவரும் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார். அரச அதிகாரிகளின் கண்ணியத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்றும் அரச அதிகாரிகள் தவறிழைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் கூறினார்.

அத்துடன், நிகழ்ச்சி நிரலில் காணப்படாத விடயங்கள் தொடர்பான தரவுகளைக் கோருவது மாத்திரமன்றி, அவற்றை அவர்கள் வழங்குவதற்கு கால அவகாசம்கூட வழங்காதிருப்பது, அரச அதிகாரிகளின் உரிமைகளை மீறும் செயலாகும் என்றும் தான் இருக்கும் சபையில் அவ்வாறான செயல்களுக்கு ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது என்றும் ஆளுநர் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், இவ்வாறான சபையில் மக்கள் பிரதிநிதிகள் எழுப்பும் கேள்விகளுக்கு உடனடியாக பதில் வழங்க முடியாவிட்டால், 24 மணித்தியாலங்களுக்கு அத்தரவுகளை எழுத்துமூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரசஅதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்த ஆளுநர், அரச அதிகாரிகள் தம் பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இதேவேளை, அமைச்சர் நஸீர் அஹமட் அவர்களின் சுற்றாடல்துறை அமைச்சினூடாக கடந்த இரண்டொரு வாரத்துக்குள் பாரியளவு மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளது என்றும் இதனால், சுற்றாடலுக்கும் பொதுமக்களுக்கும் பெரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இன்றைய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தார்.

அத்துடன், இனிவரும் காலத்தில் அப்பகுதியிலிருந்து ஒரு அங்குலம் மணலையேனும் எடுக்க தான் இடமளிக்கப்போவதில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் கடுமையாக எச்சரித்தார்.

## ஏமாற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போதைய ஆட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இடையே பொது நிகழ்ச்சிநிரல், வேலைத்திட்டம், கருத்து ஒற்றுமை, கூட்டுப் பொறுப்புடன் ஒத்த கருத்துடன் செயற்படும் நிலைப்பாடுகள் இல்லை.

நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி இந்தக் கலந்துரையாடலுக்குச் சென்றாலும், இந்தக் கலந்துரையாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில் அந்நிமிடமே குறித்த கலந்துரையாடல் மேசையை விட்டு வெளியேறும்.

அரசின் பேச்சு நேர்மையுடன் நடந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும். வெற்றிபெற வேண்டுமானால் பேச்சுகள் தூய்மையான நோக்கத்துடன் நடக்க வேண்டும். அது அரசியல் ஏமாற்று வித்தையாக இருக்கக்கூடாது.

நாட்டு நலனுக்காகச் செய்யப்படும் பணியாக பேச்சு அமையப் பெறுவதாக இருக்க வேண்டும்.

அரசிடம் தெளிவான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். இந்தக் கலந்துரையாடல்களுக்கு நாம் அழைக்கப்பட்ட போதிலும், நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் குறித்து எமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

நாட்டுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் பக்கம் இருந்து எதிர்க்கட்சி இதில் கலந்துகொள்கின்றது.

இந்த அரசில் அங்கம் வகிக்கும் 134 உறுப்பினர்களுக்கும் இடையில் பல கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன. கலந்துரையாடலுக்கு வருவதற்கு முன்னர் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒருநிலைப்பட்ட கருத்தொற்றுமைக்கு அவர்கள் வரவேண்டும்.- என்றார். (02)

## இன்றைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களை அறிவூட்டும் சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோர் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

அதேவேளை, சர்வகட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன தீர்மானித்துள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜே.வி.பி. என்பன புறக்கணிப்பதற்குத் தீர்மானித்துள்ளன. (02)

## முழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

இது தொடர்பில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கு மாகாணங்களில் முழு அடைப்பு மேற்கொள்ளப்படுவதுடன் அன்றையதினம் வட்டுவாகல் பாலத்தில் தொடங்கி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள் ளப்படவுள்ளது.

இதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியம் முழு ஆதரவினை வழங்குகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் பாதுகாப்புக் கடமைகளிலும் விசாரணைகளிலும் இலங்கைப் பொலிஸார் மட்டுமே காணப்படுகின்றனர். சர்வதேச அமைப்புகள் எதுவும் கண்காணிப்புக்காகக்கூட அங்கு காணப்படவில்லை.

இறுதிப் போரின் போது சரணடைந்த மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமலாக்கப்பட்ட எங்களது உறுவுகளுக்கு நீதி வேண்டும். அந்தவகையிலே அனைத்து மக்களும் கட்சி பேதமின்றி தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் அனைத்து கட்சிகளும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும் - என்றார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வெட்டிக் குறைத்து, வலுவற்றதாக்கி, வெறும் கண்துடைப்பாக ஒரு சில அதிகாரங்களோடு மாத்திரம், மாகாண பொலிஸ் படையினை நிறுவுவதற்கு சிங்களக்கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை எட்டப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

தமிழ்மக்களைப்பொறுத்தமட்டில், 13ஆவது திருத்தத்தின்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் எத்தவொரு மீளாய்வுக்கோ அல்லது சமரசத்துக்கோ இடமில்லை. மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அமைந்திருக்கும் இந்த அதிகாரங்களில் விட்டுக் கொடுப்புகளுக்கு இடமளிக்க முடியாது.

சிங்கள அரசியல் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத ஆட்சேபணைகளின் அடிப்படையில், இந்தவிவகாரத்தில் பிடிவாதம் காட்டினால் மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரங்கள் அர்த்தமற்றுப் போய்விடும்.

குறுகிய காலத்திற்குள் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் இருப்போடும், பாதுகாப்போடும் சம்பந்தப்பட்ட இந்த விடயங்களில் இனிமேலும் ஏமாற்றப்பட தமிழ் மக்கள் தயாரில்லை.

ஏமாற்றமே தொடரப் போகின்றது என்றால், 13ஆவது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு, சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டி இருக்கும். - என்றுள்ளது.

## வரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரியான வழிமுறையில் செலுத்துவதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரிக்கொள்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவது என்ற வகையில் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற நிகழ்வு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் நலன் கருதி வரி செலுத்தவேண்டி இருப்பதை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தற்போது அதிகமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து புலம் பெயர்ந்து வெளி நடுகளில் இருக்கின்றார்கள்.

புலம்பெயர்ந்தவர்களாக இருக்கின்றவர்களுக்குத் தெரியும் உலக நாடுகளில் எவ்விதமாக இந்தவரி அறவீடு செய்யப்படுகின்றது என்று.

அதுமட்டுமல்லாது குறித்த வரி அறவீடு அந்நாடுகளின் வருமானத்தில் எத்தகைய பெரும் பகுதியாக காணப்படுகின்றது என்றும் உணர்ந்துகொள்ள முடியும்.

அந்தவகையிலே எங்கள் நாட்டிலும் வரி அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதனை மக்கள் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

பலர் வரி செலுத்தாது தப்பிவிடுவதற்கு முயல்கின்றனர். நாம் அனைவரும் இந்தநாட்டின் குடிமக்கள் என்ற ரீதியிலும் இந்த அரசிடமிருந்து பல சேவைகளை நாங்கள் பெற்றுக் கொள்கின்றவர்கள் என்ற ரீதியில் எமக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

அத்துடன் நாங்களும் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பவர்களாக இருக்க வேண்டும்.

இலங்கையில் வருமான வரி செலுத்துகின்றவர்களின் எண்ணிக்கை இந்த நாட்டின் மொத்த குடித்தொகையில் மிகவும் குறைவான ஒரு தொகைதான்.

எனவே அரசின் புதிய வரிக்கொள்கையில் நாங்கள் இணைந்து நாட்டின் வளர்ச்சியில் பங்காளர்களாக வேண்டும் - என்றார்.

## பாப்பரசரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபட்டார்.

நல்லூர் ஆலயத்திற்குள் ஆண்கள் மேலாடைகளுடன் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் அவர்கள் நல்லூரின் வெளியே நின்று வழிபட்டுவிட்டுத் திரும்ப முயன்றனர். அப்போது அவர்களை அணுகிய ஆலய நிர்வாகத்தினர், மதகுருக்கள் ஆடைகளுடன் ஆலயத்திற்குள் சென்று வழிபட முடியும் என்று தெரிவித்திருந்தனர்.

அதனைஏற்றுக்கொண்ட மூவரும் ஆலயத்திற்குள் சென்று நல்லூர்க் கந்தனை தரிசித்தனர்.

## 13ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில கூறியிருக்கிறார். அப்படி ஒரு எண்ணப்பாட்டுக்கு அவர்கள் வருவார்களாக இருந்தால் அது முற்று முழுதாக இலங்கை படு பாதாளத்திற்கு தள்ளப்படுகின்ற நிலைமையாகத்தான் இருக்கும்.

தமிழர்கள் இயக்கர்கள், நாகர்களாக இலங்கையினுடைய தேசிய இனமாக பூர்வீககுடிகளாக இருக்கிறார்கள்.

இந்த நாட்டில் அவர்களுக்கு முழு உரித்து இருக்கிறது. வடக்கு கிழக்கில் இருக்கின்ற மக்கள் தாம் விரும்பும் ஆட்சிமுறையைத் தேர்ந்தெடுக்கும் உரித்து அவர்களுக்கு இருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் கொண்டுவரப்பட்டது. ஆனால் அதுகூட முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில் 13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை.

தமிழர்களுக்கு தீர்வு கிடைப்பதாக இருந்தால் ஒற்றையாட்சிமுறை முதலில் ஒழிக்கப்படவேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் அரசமைப்பு மாற்றமாகக் கொண்டுவரப்படும் எதுவும் தமிழர்களுக்குத் தீர்வாக அமையாது.

(நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பிலவின் கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, அவரது கருத்தை எதிர்க்கிறேன் - என்றார். (உதய கம்பன்பில தெரிவித்த கருத்து தொடர்பான செய்தி 3ஆம் பக்கத்தில்)

# 13 ஐ முழுமையாக அமுலாக்க ரணில் அரசுக்கு சு.க. ஆதரவு

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி தலைமையில் இன்று (26) நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்கேற்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. எனினும், பொலிஸ், காணி அதிகாரங்களைப் பகிர்வது குறித்து உரிய பொறிமுறை அவசியம்.

சர்வகட்சி மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்கேற்கும். அரசால் முன்னெடுக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும்.' - என்றார்.

(02)

# நாட்டில் துப்பாக்கிகளைக் கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது!

## பாலித்த ரங்கே பண்டார திட்டவட்டம்



13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் துப்பாக்கிகள் கொண்டு தீர்க்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் கோருகின்றன.

சில கட்சிகள் இதற்கு எதிர்ப்பை வெளியிடுகிறார்கள். ஆனால், இவ்வாறான பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக யாரும் சிந்திப்பதில்லை.

துப்பாக்கிகளைக் கொண்டா இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்? அதனையா இவர்கள் கோருகிறார்கள்?

ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவரும் ஜனநாயகத்தை உறுதியாக நம்புகின்றவர்கள். இதனால்தான், அவசரமாக சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்கலாம். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# எலும்புத் துண்டுகளை கடிக்கத் தயாரில்லை!

## சிவாஜிலிங்கம் இறுமாப்பு



புலம் பெயர்ந்தவர்கள் உட்பட அனைவரும் வாக்களிக்கும் விதத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதே காலத்தின் கட்டாயம் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலைசெய்யப்பட்ட அரசியல் கைதிகளின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைக்குள் எந்வொரு அரசியல் தீர்வும் கிடைக்காது. இந்த அரசியல் வாதிகளுடன் கொஞ்சிக்குலாவுவதற்கும் நாம் இனிமேல் தயாரில்லை.

அதேநேரம் அவர்கள் தரும் எலும்புத் துண்டுகளை கடிப்பதற்கும் நாம் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பு இடம் பெற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் அரசியல் மூலம் தழிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்க போவதில்லை என சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி: kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# பொலிஸ் அதிகாரத்தை இல்லாது செய்ய அரசமைப்பின் 22ஆவது திருத்தம் வரும்

## உதய கம்மன்பில கூறுகிறார்



13 ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து பொலிஸ் அதிகாரத்தை இல்லாது செய்யும் வகையில், 22 ஆவது திருத்தச் சட்டமூலமொன்றை அடுத்த வாரம் அளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்குளைப் பெற்றுக்கொள்வதற்காக, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார். இதில், பொலிஸ் அதிகாரத்தை சிறிது காலம் கழித்தும், ஏனைய அனைத்து அதிகாரங்களையும் உடனடியாக வழங்கவும் ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வர இன்று சர்வக்கட்சி மாநாடொன்றையும் ஜனாதிபதி நடத்தவுள்ளார். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற காலத்திலிருந்து, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்களையே அவர் செய்துள்ளார் என்பது, வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் அனைவருக்கும் தெரியவரும்.

எனவே, மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்துச் செய்யும் வகையில், அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூல வரைவை நாம் தயாரித்துள்ளோம்.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ளடக்கிய சட்டத்தரணிகள் குழுவே இந்த வரைவைத் தயார் செய்துள்ளனர்.

இதனை நாம் அடுத்த வாரமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளோம். - என்று தெரிவித்துள்ளார். (05)

# ஆர்ப்பாட்டம் செய்த பண்ணையாளருக்கு எதிராக மட்டக்களப்பில் வழக்குத் தாக்கல்



கடந்த மார்ச் மாதம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சட்டவிரோதமாக ஒன்றுகூடி நுழைவாசலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு எதிராக அண்மையில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கில் நீதிமன்றில் ஆஜராகிய 4 பேரையும் சொந்த பிணையில் செல்ல அனுமதித்து எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி ஆஜராகுமாறும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த மாச் 30 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற இருந்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது அங்கு மயிலதமடு, மாதவனை கால்நடைவளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் காணிகள் தனியார் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட செயலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது மாவட்ட செயலகத்திற்கு எவரும் உள்நுழையவோ வெளிச் செல்லவோ கூடாது எனவும் தெரிவித்து வாசலில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

இந்தசம்பவம்தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பேருக்குஎதிராக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் சட்டவிரோத ஒன்றுகூடல் மற்றும் மாவட்ட செயலக வாசலை வழிமறித்து அமைதிக்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்கு தாக்குதல் செய்து அவர்களுக்கான நீதிமன்ற கட்டளையை வழங்கினர்.

இதனையடுத்து குறித்த வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பீற்றர் போல் திங்கட்கிழமை விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது இந்த வழக்கில் ஆஜராகிய 4 பண்ணையாளர்களையும் சொந்த பிணையில் செல்லுமாறும் பொலிஸாருக்கு வாக்குமூலத்தை வழங்குமாறும் எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பிணையில் விடுவித்தார்.

இதேவேளை, இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பண்ணையாளர்கள் எந்தவிதமான ஆர்ப்பாடத்திலும் ஈடுபடாமல் அடிமையாக இருக்கவேண்டும்.

அரசும் பொலிஸாரும் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தால் இப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என இந்த வழக்கின் மூலம் பலப்படுகின்றது. - என்றனர். (05)

# குறும்படங்களுக்கு விருதுகள்

கர்ணன் படைப்பகம் நடத்திய குறும்படப்போட்டியில் கிஷாந்தின் இயக்கத்தில் உருவான 'கேளன்' குறும்படம் முதலிடத்தைப் பிடித்தது.

இந்தக் குறும்படப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்றது.

இந்தக் குறும்படப் போட்டியில் முதலிடத்தை கிஷாந் இயக்கிய 'கேளன்' குறும்படம் பெற்றுக் கொண்டது. அவர்களுக்கு வெற்றிக் கேடயம் மற்றும் 50 ஆயிரம் ரூபா பரிசுத்தொகை வழங்கி வைக்கப்பட்டது.

இரண்டாமிடத்தை ஜனா மோகேந்திரனின் 'வெற்றிக்கதை' குறும்படமும் 3 ஆம் இடத்தை ஷாஜாவின் 'புதிய பாதை' குறும்படமும் பெற்றுக்கொண்டன. இவர்களுக்கு வெற்றிக் கேடயமும் முறையே 30 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபா பரிசுத்தொகையும் வழங்கி வைக்கப்பட்டது.

தவிர, முதல் 10 இடங்களுக்குள் தெரிவான ஏனைய 7 குறும்படங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பணப் பரிசும் சான்றிதழ் மற்றும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குவியம் மீடியா நிர்வாக இயக்குநர் கனகநாயகம் வரோதயன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடபீடாதிபதி பேராசிரியர் ரகுராமும் சிறப்பு விருந்தினர்களாக வைத்தியகலாநிதி சிவன்சுதன் (தயாரிப்பாளர் - தூவானம் திரைப்படம்), முன்னாள் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம், கர்ணன் படைப்பக நிறுவுநர் சண்முகநாதன் சபேசன், யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறைத்தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)

# சீனாவின் கடன் மறுசீரமைப்பு தாமதத்தால் எதிர்காலம் ஆபத்தில்

சீனாவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் சுமையின் காரணமாக இலங்கை சமீப காலங்களில் ஒரு பொருளாதாரப் போரை எதிர்கொண்டுள்ளது.

நாடு அதிகரித்துவரும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில், அரசாங்கம் மக்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்டவற்றில் கைவைக்கும் தீவிர நடவடிக்கைகளை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இந்த நடவடிக்கை ஏழைகளின் நலன் குறித்த கவலையை எழுப்பியுள்ளது. அவர்கள் தமது எதிர்கால பாதுகாப்பிற்காக இந்த நிதியையே நம்பியுள்ளனர். கடனை மறுசீரமைப்பதில் சீனா தயங்குவதால், நிலைமை இன்னும் மோசமாகி, இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அதன் குடிமக்களின் நல்வாழ்வுக்கு ஆபத்தை விளைவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக, துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளித்துள்ள சீனா, இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த முதலீடுகள் அதிக வட்டியுடனான கடன்களாகவே கிடைத்துள்ளன. அந்தக் கடன்களை இலங்கை இப்போது திருப்பிச் செலுத்த முடியாமல் தவித்து வருகிறது. கடன் பொறுப்புகள் குவிந்து கிடப்பதால், நாடு தனது கடன்களைத் திருப்பிச் செலுத்தாத அபாயத்தை எதிர்கொள்கிறது.

இலங்கை மோசமான பொருளாதார நிலைமை எதிர்கொள்வதாக இருந்தபோதிலும், கடன் மறுசீரமைப்பு பேச்சுகளுக்கு சீனாவின் பதில் மெதுவாகவும் உறுதியற்றதாகவும் உள்ளது. உடனடி நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, கடனை மறுசீரமைப்பதற்கு சாதகமான நிபந்தனைகளை வழங்க சீனா தயக்கம் காட்டுவதாகத் தெரிகிறது, இதனால் இலங்கையின் நிதி நெருக்கடி நீடிக்கிறது.

இந்தத் தாமதம் இலங்கை அரசாங்கத்துக்கு வரையறுக்கப்பட்ட உள்நாட்டு சேமிப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கை அரசாங்கம் தனது குடிமக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தில் உள்ள ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றில் கை வைத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது குடிமக்கள் கடின உழைப்பில் சம்பாதித்த சேமிப்பை உடனடி கடன்சுமைகளை சந்திக்க பயன்படுத்துவதற்கு எடுத்துள்ள தீர்மானம் ஓய்வூதியம், அவசரநிலை மற்றும் எதிர்காலத்துக்காக இந்நிதியை பெரிதும் நம்பியிருக்கும் ஏழைகளுக்கு இது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் நலன்கள் ஆபத்துக்கு உள்ளாவதுடன் பிற்காலங்களில் அவர்களுக்கான நிதி ஸ்திரத்தன்மை குறித்தும் நிச்சயமற்ற நிலையில் உள்ளது.

சரியான நேரத்தில், விரிவான கடன் மறுசீரமைப்பு விவாதங்களில் ஈடுபடுவதற்கு சீனா தொடர்ச்சியாக தயக்கம் காட்டுவது இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையில் சுமையை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதன் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புகளையும் அச்சுறுத்துகிறது.

கடன் நெருக்கடிக்கு நிலையான தீர்வு இல்லாதது, நீண்ட கால பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்புக்கு அத்தியாவசியமான கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளில் முதலீடு செய்வதற்கான நாட்டின் திறனைத் தடுக்கிறது.

சீனாவின் கடன் மறுசீரமைப்பு பேச்சுகளின் மெதுவான வேகம் இலங்கையை முட்டுச்சந்துக்குள் தள்ளுகிறது, இதனால் இலங்கை அரசாங்கத்தின் குறுகிய நோக்குடைய அணுகுமுறை ஏழைகள் மீது நியாயமற்ற சுமையை ஏற்றுகிறது.

குடிமக்களின் நல்வாழ்வை உறுதிசெய்யும் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் கடன் நெருக்கடிக்கு சாத்தியமான மற்றும் சமமான தீர்வைக் கண்டறிவது சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இன்றியமையாததாகும். கூட்டு முயற்சிகள் மூலம் மட்டுமே இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் பிரகாசமான மற்றும் நிலையான எதிர்காலத்துக்கு வழி வகுக்கும். (05)



# பச்சை குத்துவதாலும் எய்ட்ஸ் பரவும் அபாயம்

பச்சை குத்தும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தாததாலும், பல நிறுவனங்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாததாலும் எய்ட்ஸ் உள்ளிட்ட சமூக நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக இலங்கை பச்சைகுத்துவோர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கிட்டத்தட்ட ஐயாயிரம் பச்சை குத்தும் நிறுவனங்கள் உள்ளன, அவற்றில் 140 மட்டுமே சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை டாட்டூ சங்கம் கூறுகிறது.

அனைத்துபச்சைகுத்தும் நிறுவனங்களுக்கும் அறுவை சிகிச்சை அறையின் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பணியிடத்தை கிருமி நீக்கம் செய்து கருவிகளை கிருமி நீக்கம் செய்ய வேண் டும் என்றும் சங்கம் சுட்டிக் காட்டுகிறது.

பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஊசிகளை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், சில நிறுவனங்கள் அவற்றை கிருமி நீக்கம் செய்யாமல் பல முறை பயன்படுத்துகின்றன எனவும் அவர்கள் கூறுகிறார்கள். இதன் காரணமாக சமூக நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் ஊசிகளின் வகைகளை அழிக்கும் முறை இல்லை எனவும், அவற்றை முறையாக அப்புறப்படுத்தாவிட்டாலும் அவை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பச்சை குத்தும் ஸ்தாபனமொன்றை நடத்துவதற்கான வர்த்தகப் பதிவுச் சான்றிதழைக்கூட பெற்றுக்கொள்ளும் வசதி இந்த நாட்டில் இல்லை என சங்கத்தின் ஸ்தாபகர் சஜித் டிசில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# 35 ரூபாவுக்கு முட்டைகளை லங்கா சதொசவில் பெறலாம்

## ஏற்பாடு செய்கிறார் வர்த்தக அமைச்சர்

லங்காசதொசவிற்பனை நிலையங்கள் மூலம் இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரத்தில்இருந்து அனைத்துசதொசவிற்பனை நிலையங்களிலும்இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் தலா 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 100,000 முட்டைகளை சந்தைக்கு வெளியிடப்படும் என நம்புவதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

ஆனால், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் ஹோட்டல் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டன.

முட்டைகளைஇறக்குமதி செய்த போதிலும், உள்ளூர் விலையில் மாற்றம் இல்லாதால், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விநியோகிக்க வர்த்தக அமைச்சு முடிவு செய்துள்ளது. (05)

# 16 வயது சிறுமிகள் மூவர் காப்பகத்திலிருந்து ஓட்டம்

கம்பஹாவிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் வசித்து வந்த 16 வயதுடைய 3 சிறுமிகள் தப்பிச்சென்றுள்ளனர் என கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் சிறுவர் இல்ல பாதுகாவலர் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து தப்பிச்சென்ற சிறுமிகள் தொடர்பில் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸாரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தப்பிச்சென்ற சிறுமிகளை தேடும் பணியில் கம்பஹா பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# 2022 ஆம் ஆண்டில் 463 யானைகள் சாவு

2022 ஆம் ஆண்டில் 463 யானைகள் உயிரிழந்துள்ளன என இலங்கை சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் உயிரிழந்த யானைகளில் கடந்தாண்டே பெருமளவான யானைகள் உயிரிழந்துள்ளன என மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரான கலாநிதி ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்களில் பெரும்பாலானவை மனித ஈடுபாட்டால் ஏற்படுவதாகவும் ரவீந்திர காரியவசம் தெரிவித்தார். யானைகளின் எண்ணிக்கையைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அது சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலை தொடருமானால், இலங்கையில் காட்டு யானையைக் கண்டறிவது அரிதான நிகழ்வாகிவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேரினவாதிகளுக்கு வாய்ப்பு வழங்கும் ரணில்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மீண்டும் ஒரு சர்வகட்சிக் கூட்டத்துக்கு இன்று அழைப்பு விடுத்திருக்கிறார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. இந்தக் கூட்டத்தில் முக்கியமாக 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காவல்துறை அதிகாரங்கள் குறித்து மற்றைய கட்சிகளின் கருத்துக்களை அறியப் போகிறார் என்று அவர் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு அவர் மற்றக் கட்சித் தலைவர்களுடன் காவல்துறை அதிகாரம் குறித்துப் பேசுவது அதனை எதிர்ப்பவர்களுக்கு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

''13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான காவல்துறை அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடாத்தியே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்க்கும் சகல தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கும், அவற்றின் நோக்கம் நிறைவேறுவதற்கான நல்லதோர் சந்தர்ப்பத்தை இந்தப் பேச்சு வழங்கப்போகின்றது" என்கிறார் சிறீகாந்தா. அதில் உண்மையும் இருக்கின்றது.

இதற்கு முன்னரும் இதுபோன்ற ஒரு சர்வகட்சிக் கூட்டத்தை ரணில் கூட்டினார். தான் அரசுத் தலைவராகப் பதவியேற்றதும், மாசி 4ஆம் நாள் சுதந்திர தினத்திற்கு முன்பாகத் தீர்வு என்று அறிவித்திருந்த நிலையில், அதற்கு முன்பாக அவர் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அதிலும், காவல்துறை அதிகாரம் உட்பட 13ஐ முழுமையாகச் செயற்படுத்தப்போகின்றேன் என்று கொளுத்திப் போட்டார். அந்தக் கூட்டத்தில் அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து பிக்குகள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அரசமைப்பின் பிரதிகளை எரித்தனர். 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு அமைதியை இழக்கும் என்று எச்சரித்தனர். அந்த எதிர்ப்பைக் காரணம் காட்டியே காவல்துறை அதிகாரத்தை மட்டுமல்ல, 13ஐ நடைமுறைப்படுத்தும் யோசனையையே 6 மாதங்களாகக் கைவிட்டார் ரணில் விக்கிரமசிங்க.

இப்போது மீண்டும் பழைய பல்லவியையே பாடியபடி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இந்தக் கூட்டத்திலும் பௌத்த சிங்களப் பேரினவாத அரசியலை முன்னெடுக்கும் சரத் வீரசேகர, கம்பன்பில, விமல் போன்றவர்கள் அரசுத் தலைவரின் யோசனையை எதிர்ப்பார்கள். அந்த எதிர்ப்பைக் காரணம் காட்டி 13இல் இருக்கும் காவல்துறை அதிகாரத்தை நீர்த்துப் போகச் செய்யும் ஒரு முயற்சியில் அவர் இறங்குவார், அதற்கும் எதிர்ப்பு வரும். பின்னர் அடுத்த அரசுத் தலைவர் தேர்தல் வரைக்கும் இந்த முயற்சியைக் கிடப்பில் போட்டுவிட்டு, தேர்தலில் வென்றதும் – மக்கள் ஆணையைப் பெற்றதும் – தான் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று பரப்புரை செய்வார் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

ஆக மொத்தத்தில் இன்றைய சர்வகட்சிக் கூட்டத்தின் மூலமும் 13 தொடர்பில் எந்த உருப்படியான காரியங்களும் நடக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. பதிலாக 13ஐ பகுதிளவிலேனும் இல்லாதொழிப்பதற்கான அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான முனைப்பை அவர் தீவிரப்படுத்துவார் என்று எதிர்பார்க்கலாம். ஏனெனில் அது மட்டுமல்ல அந்தக் கூட்டத்தில் அரசுத் தலைவர் மற்றொரு விடயத்தையும் முன்வைத்திருந்தார். இதற்கு முந்தைய சர்வகட்சிக் கூட்டத்தில் 13ஐ நடைமுறைப்படுத்தவேண்டும், இல்லையேல் அதனை நாடாளுமன்றத்தில் சட்டத்தைக் கொண்டு வந்து இல்லாதொழிக்கவேண்டும், எதிர்க்கிறவர்கள் அதனைச் செய்யுங்கள் என்று தெரிவித்திருந்தார். அதன்படி இப்போது காவல்துறை அதிகாரத்தை வெட்டிக் குறைப்பதற்கான சட்டத் திருத்தத்தை தான் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்போவதாக கம்பன்பில அறிவித்திருக்கிறார்.

எனவே தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சிறீகாந்தா சுட்டிக்காட்டுவது போல இன்றைய கூட்டம் 13ஐ எதிர்ப்போருக்கான மற்றொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கானதாகவே இருக்கப் போகின்றது.

நீதிமன்ற உத்தரவை மீறி தனக்குள்ள அதிகாரங்களைக் குறுக்கு வழியில் பயன்படுத்தி மக்களின் வாக்குரிமையைப் பறித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நிறுத்திய அரசுத் தலைவருக்கு, நாடு முழுவதும் எதிர்த்து நின்று போராட்டங்களை நடத்தியபோதும் அதனை அடக்கி வரியை அறவிடத் தெரிந்த அரசுத் தலைவருக்கு, நாடாளுமன்றத்தில் தான் முன்வைக்கும் எல்லாத் தீர்மானங்களுக்கும் பெரும்பான்மையை நிரூபிக்கத் தெரிந்த அரசுத் தலைவருக்கு, அரசமைப்பில் 35 வருடங்களாக இருக்கும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மட்டும்தான் சர்வகட்சி மாநாடுகள் தேவைப்படுகின்றன என்பது ஏமாற்று வேலை அன்றி வேறென்ன!

# திருத்தொண்டர் தொகை தந்த சிவத் தமிழ் அடியார்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

இறைவன் மீது தோழமை உணர்வுடன் இப்பூவுலகில் வாழ்ந்தவர்தான் ஆலாலசுந்தரர் என்று அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார்.

சுந்தரர் பூமியில் பிறந்த வரலாறு தேவ உலகுடன், எம்பெருமான் சிவனுடன் இணைந்த வரலாறாகக் கருதப்படுகிறது. இறைவனுக்குத் தேவ உலகில் அணுகு தொண்டராக இருந்தவர் - மனந்தடுமாறி பேரின்பச் சூழலை மறந்து சிற்றின்பத்துக்குள் மனதினைச் செலுத்திய காரணத்தால் பூவுலகில் பிறவி எடுக்கும் நிலைக்கு ஆளா கிறார். தேவ உலகில் இவரின் சிந்தையினைக் கலைத்த பெண்களும் பூவுலகில் பிறக்கும் நிலை ஏற்படுகிறது. சிற்றின்ப ஆசைகளுக்கு உரிய இடம் பூவுலகமே ஆனதால் சுந்தரரின் சிற்றின்ப உணர்வுகளைப் பகிர்வதற்கு -அவருக்குச் சலனத்தை ஏற்படுத்திய பெண்களே துணையாகவும் வந்து அமைகிறார்கள். அவர்களை மணந்து சுந்தரர் - தான் வந்தவேலை முடிந்தவுடன் - எங்கு முன்னர் இருந்தாரோ அங்கேயே போகிறார் என்பதுதான் ஆலாலசுந்தரரின் வரலாறாய்ப் படிக்கின்றோம்.




கதைகளை நம்பலாமா என்று எண்ணத் தோன்றுகிறது. கதைகள் எப்படி இருந்தாலும் கதைகளூடாகப் புலப்படுகின்ற கருத்துக்களைத்தான் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். காமனையே தகனம் செய்த இடத்தில் காதலுக்கு இடமே இல்லை. காதல் கொண்டால் தண்டனை அனுபவிக்கவேண்டும், தண்டனைதான் பூவுலகில் வந்து பிறப்பது. பூவுலகுதான் காதலுக்கும் , சிற்றின்பத்துக்கும் ஏற்ற இடமாகும். சிற்றின்பத்தை அனுபவிக்கும் வேளை பேரின்பம் பற்றிய புரிதல் வரும். வருவதற்கு பேரின்ப மயமான அந்தப் பெரும் பொருளை , பரம்பெருளைப் பற்ற வேண்டும். பற்றும் நிலையும் பல இருக்கிறது. அதில் ஒரு நிலை நட்பு நிலையாகும். அதாவது அந்தப் பரம்பொருளை நண்பனாகக் கொண்டு அவனிடம் அடைக்கலம் புகுவதேயாகும். அதைத்தான் ஆலால சுந்தரர் இப்பிறவியில் கையாண்டார்.

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதாமார்க்கம் மென்றுஞ்சங் கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்

என்று சிவஞானசித்தியார் இறைவன்மீது அடியார் கொள்ளும் பக்தி நிலை பற்றிக் காட்டுவது நோக்கத்தக்கது.

அந்தணராய் பிறந்தார். அரசனாய் வளர்ந்தார். ஆடம்பரமான வாழ்வினை வாழ்ந்தார். அப்பரைப் போலவோ, மணிவாசகரைப் போலவோ ஆலாலசுந்தரர் வாழ்ந்தவராகத் தெரியவில்லை. சுந்தரரைக் காட்டும் அத்தனை படங்களுமே அவர் அணி மணிகளுடன் ஆடம்பரமாய் அரசிளங்குமரனாகவே இருப்பதாகவே அமைந்திருக்கின்றன. அப்பரையோ மணிவாசகரையோ காட்டும் படங்கள் அத்தனையும் எதுவுமே இல்லாத துறவுக் கோலத்தில் இருப்பதாகவே அமைந்திருப்பதையும் காணமுடிகிறது. ஆனாலும் சுந்தரர் இறைவனின் நண்பனாக விளங்கி - தான் விரும்பிய அனைத்தையும் உரிமையுடன் கேட்டுப் பெற்றுக் கொண்டார் என்றும் அவரின் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு அவர் மணக்கோலத்தில் வருகிறார். பெண்வீட்டாரும் வருகிறார்கள். அந்த ஆனந்தமான வேளையில் சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல - ஒரு கிழப்பிரா மணர் உள்ளே வந்து விடுகிறார். புதிய புரட்சியை அவர் உருவாக்கி விடுகிறார். திருமணம் செய்ய இருக்கும் மணமகன் சுந்தரன் - தனக்கு அடிமை என்று ஒரு குண்டைப் போட்டு விடுகிறார். திருமணத்தை காண வந்தவர்கள் கைக்கிறார்கள்! மணமகன் அடிமையா ? என்ன வினோதம் என்று யாவரும் முணுமுணுக்கிறார்கள். வந்த கிழப்பிராமணரோ பிடித்த பிடியாக சுந்தரன் எனக்கு அடிமை என்று அடித்துச் சொல்லி - அதற்கான எழுத்து ஆதாரத்தையும் காட்டுகிறார். சபையினரால் எதுவுமே செய்ய முடியவில்லை.



மணமகன் கோலத்தில் இருந்த சுந்தரர் நீர் என்ன பித்தனா அல்லது பேயனா - மனிதனுக்கு மனிதன் அடிமையா? இது முறையற்றது என்று துள்ளிக் குதிக்கிறார். ஆனாலும் கிழப்பிராமணரின் பக்கம் வலுவாய் இருப்பதால் யாவரும் அவரையே பார்த்தபடி செயலற்று நிற்கிறார்கள். உஷாரான கிழப்பிராமணர் இந்த வழக்கினைத் தீர்க்க இந்த இடம் பொருத்தம் அல்ல - நான் இருக்கும் திருவெண்ணை நல்லூர்தான் பொருத்தம் என்று கூறி சுந்தரர் பின் தொடர திருவெண்ணை நல்லூர் செல்கிறார். அங்குள்ள கோவிலுக்குள் சென்ற அந்தணர் மறைகிறார். அனைவரும் திகைக் கின்றனர். எம்பெருமான் காட்சி தருகிறார். சுந்தரர் தெளிவு பெறு கிறார். என்னை எப்படிப் பேசினாயோ அப்படியே சொற்றமிழால் சுந்தரா பாடு - உன் பாட்டே எனக்கு உகந்த அர்ச்சனை ஆகும் என்கிறார் இறைவன். சுந்தரர் வாயிலிருந்து செந்தமிழ் அருவியாய் பெருக்கெடுக்கிறது. இறைவனை எந்தவார்த்தையால் திட்டினாரோ அதே வார்த்தையையே வைத்து

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை
நல்லூர் அருட்துறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே

என்று மனங்கசிந்துருகிப் பாடிப் பரவி நின்றார். நாயேன் பலநாளும் உன் நினைப்பின்றி இருந்தேன். அதனால் பேயாய் திருந்தேன், நீ பொன்னாய் , மணியாய் , வயிரமாய் இருக்கின்றாய் நானோ உன்னை மறந்தே இருந்திருக்கிறேன். ஊனாய், உயிராய், உடலாய், உலகாய், வானாய், நிலனாய், கடலாய், மலையாய், நீயே இருக்கிறாய். நானோ உனை அறியாமல் இருந்து விட்டேன்.

என்று தம்மைத் தடுத்தாட்கொண்ட நிலையில் சுந்தரர் மெய்யுருகிச் செந்தமிழால் பரம்பொருளைப் பாடி நிற்கிறார். உனக்கு நான் ஏற்கனவே அடியவன் என்பதை மறந்துவிட்டேன் . நீ வந்து தெளிவு படுத்தி என்னை உனது மீளா அடைமையாய் ஆக்கி - என்னை மீட்டெடுத்தாயே பரம் பொருளே என்று ஏங்குவதும் , இரங்குவதும் சுந்தரர் நிலையால் வெளிப்பட்டு நிற்கிறது எனலாம். ஆண்டவனின் பரீட்சை அடியவனைக் கடைத்தேற்றியதை இங்கு கண்டு தெளிகி றோம்.

திருமணம் தொடக்கத்தில் இப்படியெல்லாம் நடந்திருக்குமா என்று கேள்விகள் கேட்டு குழம்புவதில் பயனில்லை. தனது அடியானைத் தடுத்தாட்கொள்ள நடந்த ஒரு அற்புதம் என்றுதான் இதனைக் கொள்ள வேண்டும். எங்களுக்கும் இப்படி வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களை அந்தப் படைத்தவன் செய்து காட்டியிருப்பான் என்பதை நினைத்துப் பார்த்தால் சுந்தர் கதை நன்றாகவே விளங்கும் என எண்ணுகிறேன்.

இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தர் பின்னர் சங்கிலியார், பரவையார் என்னும் பெண்களை மணமுடிக்கிறார். பூவுலகில் அனுபவிக்கும் இன்பங்களை அனுபவிக்கிறார். அவரின் விருப்பங்களுக்கு ஆண்டவனும் நண்பனாய் இருந்து அருள்பாலிக்கிறார் என்பதும் சுந்தரர் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரர் பற்றிய கதைகள் பலவற்றைக் கேட்கும் நாம் - சுந்தரரின் முக்கியத்துவம் பற்றி நோக்குவதுதான் மிகவும் அவசியமாகும். அவற்றையே அகம்இருத்துவதுதான் முறையானதாகும் என்று கருதுகிறேன். சுந்தரரின் தடுதாட்கொண்ட கதையில் மனம் லயிக்கும் நாங்கள் சுந்தரரின் பங்களிப்பை பற்றிப் பெரிதும் பார்ப்பதே இல்லை. பித்தா பிறை சூடி என்னும் பதிகத்தையும் மீளா அடிமை உனக்கே ஆளாய் என்னும் பதிகத்தையும் பாடி நிற்கும் அளவிலேயே சுந்தரரை விட்டு விடுவோம். ஆனால் அதற்கு அப்பாலும் சென்று சுந்தரரை நாம் பார்க்க வேண்டும் என்பதுதான் எனது மனக்கிடக் கையாகும்.

சம்பந்தர் , அப்பர் காலம் போல் சுந்தரர் காலம் அமையவில்லை. சம்பந்தருக்கும் அப்பருக்கும் புறச்சமயங்களின் எதிர்ப்பலைகள் நிறையவே இருந்தன. அவர்களின் பணிகள் அனைத்துமே - புறச்சமயங்களின் எதிர்ப்பினின்று சைவத்தை மேன்மை கொள் சைவமாக மிளிர்ந்திடச் செய்ய வேண்டும் என்னும் வகையிலே அமைந்தது எனலாம். அதற்காகவே அவர்கள் அடியவர்கள் புடைசூழ பக்தியென்னும் புரட்சியை சமூகத்தில் நடத்திக் காட்ட வேண்டியவர்களாகவே செயற்பட்டார்கள். ஆனால் சுந்தரர் காலம் அப்படி இல்லாத காரணத்தால் சுந்தரரின் பக்திப் பாடல்கள் நோக்கும், போக்கும் வித்தியாசமாய் அமைந்தது என்பது கருத்திருத்த வேண்டியது முக்கியம் எனலாம்.

சுந்தரர் இக இன்பங்களில் திளைத்தவராகவே இருந்திருக்கின்றார். ஆனால் எந்த நிலையிலும் இறைவனை மறவாதவராக , இறைபுகழ் பாடுபவராக, இருந்திருக்கிறார் என்பதும் நோக்கத்தக்கது. துறவையோ , வெறுப்பையோ அவரது பக்திப் பனுவல்கள் காட்டுவதாக இல்லை எனலாம். இயற்கையினை மிகவும் நேசித்துப் பாடுகிறார். இரந்து நின்று பாடிப் பரிசில் பெறும் நிலையினை அவர் சாடுகிறார். தனக்கு வேண்டியவற்றை இறைவனிடம் நண்பனாய் கேட்டே பெறுகின்றவராய் சுந்தரர் இருக்கின்றார்.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே

என்று வித்தியாசமாய் சிந்தித்துப் பாடுவது சுந்தரரின் முக்கியத்துவம் எனலாம். அதாவது தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும், சார்ந்து நின்றாலும், பொருள்தர மனம் வராத பொய்மைமயான வாழ்வு உடைய செல்வரைப் பாடாமல், சிவனுடைய கோவிலைப் பாடுங்கள், இந்தப் பிறப்புக்கு உரிய உணவும் உடையும் பெறலாம்; மறுமையில் சிவகதியும் கிடைக்கும். ஐயம் இல்லை என்பதேயாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhepees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார்



ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிற்கும் ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிராஞ்ஸ்க்கும் இடையிலான சந்திப்பொன்று திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

இலங்கையின்பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்திக்கான பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இலங்கையின் நிதி தொடர்பான சவால்களை முறியடிப்பதற்கும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளைஅடைவதற்கும்கடன் மறுசீரமைப்பிற்கும் ஐ.நா. ஒத்துழைப்பை வழங்கும் என மார்க் ஆன்ட்ரே தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத் திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு கையளித்தார். வடக்கு, கிழக்குமக்களின்நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் இனங்களுக்கிடையில்சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதுமே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும், அதற்காக எதிர்காலத்தில் நாட்டில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். இலங்கையில் புதியமறுசீரமைப்புவேலைத் திட்டத்தைசெயற்படுத்துவதில் இலங்கையும் ஐக்கிய நாடுகள் சபையும் நெருக்கமாக செயற்படவும் இரு தரப்பினரும்இணக்கம்தெரிவித்தனர். (05)

# சர்வதேச நாணய நிதிய மீளாய்வை வெற்றிகரமாக எதிர்கொள்ளமுடியும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின்கடன்மீளாய்வுவேலைத் திட்டத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளமுடியும் என அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளின் 80 வீதம் தற்போது நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இதேவேளை, சூதாட்ட மற்றும் பந்தய வரி திருத்தம் தொடர்பான விதிமுறைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)



# கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் மூடப்பட உள்ளது!

முன்னர் அறிவித்ததன் பிரகாரம் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் எதிர்வரும் 31 ஆம் திகதியில் இருந்து நிரந்தரமாக மூடப்படும் என அறிவிக்கப்பட்டது. புதுடில்லியில் உள்ள நோர்வேத் தூதரகம் இலங்கை மற்றும் மாலைதீவுடனான இருதரப்பு உறவுகளைக் கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள தனது பணிகளில் பல மாற்றங்களைச் செய்வதாகவும், கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் உட்பட ஐந்து வெளிநாட்டுத் தூதரங்களை மூடுவதாகவும் கடந்த ஆண்டு நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்தது.(05)

# திருத்தொண்டர் தொகை தந்த




(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வீரத்தின் மிடுக்கு இல்லாத செல்வனை - வீமன் , அருச்சுனன் என்று புகழ்வதில் எந்தப்பயனுமில்லை கொடுக்க மனம் இல்லாதவனைப் பாரி என்று புகழ்ந்து கூறினாலும் கொடுபவர் இல்லை. மூத்துத் தளர்ந்து உடல் நடுங்கும் கிழவனாகிய செல்வனை - மலை போன்ற தோள் உடையவன் என்று புகழ்ந்து வாழ்த்துவதால் பயன் இல்லை.வஞ்ச நெஞ்சனை , கொடியவனை, பாவியை, கெட்டவனை , சாது என்று கூறிப் பாடுவதால் பயன் இல்லை.ஈயாத உலோபியை வள்ளல் என்றும் , கல்வி இல்லாதவனைக் கல்வி வல்லவன் என்றும், புகழ்ந்து காலம் கழிக்காதீர்.எம்பெருமான் சிவனைப் பாடிப் பயன் பெறுங்கள் என்று காட்டும் பாங்கு சுந்தரரின் வித்தியாசமான சிந்தனையினையினை வெளிக்காட்டி நிற்கிறதல்லவா !

சம்பந்தர், அப்பர், மணிவாசகர் செய்யாத ஒரு காரியத்தைச் சுந்தரர் செய்து தமிழ்ப் பக்திப் பரப்பில் முக்கியத்துவத்தைப் பெற்று நிற்கிறார். தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் எனத்தொடங்கும் திருத்தொண்டத் தொகையினை அளித்தமை எனலாம்.சுந்தரரின் இந்தக் கொடை மட்டும் கிடைக்கா விட்டிருந்தால் - நாங்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடும் சைவத்தின் அறுபத்துமூவரும்வந்திருக்கவேமாட்டார்கள். அவர்களின் இறை அனுபவங்களையும் நாம் அறியும் வாய்ப்பும் எமக்கு வாய்த்திருக்காது. அந்த பெருவாய்ப்பினைநாம்இன்று பெற்றிருப்பதற்கு அத்திவாரமே சுந்தரர்தான் என்பதை மனமிருத் துதல் அவசியமாகும்.

சுந்தரரின் திருத்தொண்டர் தொகை இல்லையேல் - பெரியபுராணம் வந்திருக்காது. சேக்கிழார் என்னும் தெய்வப்புலவர், செந்தமிழ் புலவர் - இறை அடியார்களை எங்கள் கண்முன்னே கொண்டுவந்து காட்டியிருக்கும் நிலையும் ஏற்பட்டிருக்காது. சிந்தாமணியில் மூழ்கிய சோழ மன்னனும் சிவனின் திருவருளை அறிந்திருக்க மாட்டான்.

பெரியபுராணம் என்னும் சைவத்தமிழ் காப்பியம் இன்று சைவவ த்துக்கே பெரும் பொக்கிமாய் திகழ்கிறது என்றால் அதற்கு மூலகாரணமேஆலாலசுந்தரர்தான்என்பதை மறுத்துரைத்துவிட முடியாது. ஆலயங்கள் தோறும்அடியார்களின்திருவுருவச்சிலைகள் வைக்கப்பட்டு , உரிய காலங்களில் குருபூஜை செய்யப்பட்டு, திருவீதி உலா வருவதற்கும் ஆலாலசுந்தரப் பெருமானே அடித்தளம் இட்டார் என்பது பெரு முக்கியத்தைத்தை உணர்த்து கிறதல்லவா !

தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன் நாஒன்றே
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்கு உயிரும்
தான்படிக்கும் அனுபங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே
வாழி திருநாவலூர் வந்தொண்டர் பதம் போற்றி




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDUM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

# சித்தமெல்லாம் நிறைந்த சித்தானைக்குட்டி









'சித்தத்தில்உறைந்தவராம்சித்தானைக்குட்டிஎங்கள் சித்தமெல்லாம் நிறைந்தவராம் சித்தானைக்குட்டி.

இவ்வாறு பக்தர்களால் அன்போடு பக்தியோடு நம்பிக்கையோடுபாடித்துதிக்கப்படும்ஸ்ரீசித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு இன்று72ஆவது குருபூஜை.

சுவாமி கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1951 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 21 ஆம் நாள் சுவாதி நட்சத்திர தினத்தன்று ஜீவ சமாதியானார்.

பாரத நாட்டின் இராமநாதபுரத்து சிற்றரசன் மகனாக அவதரித்த இம்மாபெரும் சித்தர் ஆடிய சித்துக்கள் எண்ணிலடங்கா.

கதிர்காமதிருவிழாகாட்சியைதனதுஉள்ளங்கையில் காண்பித்த இம்மகான் கதிர்காமக் காட்டில் வழிதப்பிய- வர்களுக்கு வழிகாட்டியுள்ளார். மேலும் சாண்டோ சங்கரதாசை பெரும் இரும்பரசனாக புகழ் பூக்கச் செய்தவரும் சித்தானைக்குட்டி சுவாமிகளே!

இவர் ஆடிய சித்துக்களில் குறிப்பிடத்தக்கவை: ஊமையை பேசவைத்தார்.

மாண்ட பெண்ணை உயிர்ப்பித்தார். கடலில் அகப்பட்டவனை மீட்டார் மாட்டிறைச்சி மல்லிகைப் பூவாக்கினார். கடலின் மேலால் நடந்தார்.ஒரு முறை கல்முனை சந்தியில் நின்று கதிர்காமத்தில் தீப்பிடித்த திரை சேலையை அணைத்தார். அறுத்த மீனை பலா சுளையாக மாற்றினார்.

இவர் ஆடிய சித்துக்கள் இன்னும் பல பல...

காரைதீவு2004ஆம்ஆண்டுஆழிப்பேரலையால் தாக்கப்பட்ட போது சித்தானைக்ககுட்டி சமாதி கோயில் மட்டும் தப்பியது மிக மிக அற்புதமானதொன்றாகும். ஜீவ சமாதி அடைந்த இந்த மகான் இன்றும் அவரை சரணடைந்தவர்களை எத்தனையோ ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்து காத்து வருகின்றார் என பக்தர்களிடம் இருந்து பல்வேறு அனுபவங்களை கேள்விப்படுகின்றோம்.

2011ஆம் ஆண்டு சுவாமியின் 60ஆவது குருபூசை தினத்தில் ஐம்பொன் சிலை பிரம்மரிஷி மலை அன்னை சித்தர் இராஜகுமார் சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**ஆதியந்த மொன்றுமிலா ஐயன் வாழ்க**
**அருட் சக்தி வாழ்க ஜங்கரனும் வாழ்க**
**சோதி வடிவேல் வாழ்க தூயோர் வாழ்க**
**தொண்டர்ரெலாம் துயரின்றி வாழ்க வாழ்க**
**பூதலத்தில் மக்களெல்லாம் ஓர் தாய் பெற்ற**
**புத்திரர் போல் ஒருமித்து பொழிந்து வாழ்க**
**சாதிமத பேதமில்லா சன்மார்க்கத்தை தந்த**
**சித்தர் சித்தானைக்குட்டி வாழ்க வாழ்கவே.**
**(சித்தர்துதி)**

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு நிருபர்.



# மலையக மக்களின் உரிமைகளை வெல்ல சமரசமேதுமின்றி தொடர்ந்து பயணிப்போம்

## கட்சியின் 84ஆவது ஆண்டில் தலைவர் செந்தில் உத்தரவாதம்



அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் ஆசியுடன் அவர்களது பாதையில் பயணித்து மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சமரசமின்றி தொடர்ந்து பணியாற்றும் என இ.தொ.காவின் 84 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ் 84 வருடங்களைப் பூர்த்தி செய்து 85 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்து, மலையகத்துக்காக பாரிய சேவைகளை செய்துள்ளது. பிரஜா உரிமையற்ற சமூகமாக இருந்த மலையக மக்களுக்கு பிரஜா உரிமையை பெற்றுக்கொடுத்த அதேவேளை அம்மக்களுக்கு சம உரிமை மற்றும் உரிமைகள், அபிவிருத்தி போன்ற பல விடயங்களை மலையகத்தில் முன்னெடுத்ததுடன் எண்ணிலடங்காத பல சேவைகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செய்துள்ளது.

மேலும், ஆண், பெண் இருபாலாருக்கும் சமமான சம்பளம், தோட்டப்புறங்களுக்கான அபிவிருத்தி, பாடசாலை மற்றும் வைத்தியசாலைகள் நிர்மாணிக்கப்பட்டமை, ஆசிரியர் நியமனங்களை பெற்றுக்கொடுத்தமை என இ.தொ.கா. மலையகமக்களுக்குபரந்துபட்ட சேவையையும் ஆற்றியுள்ளது.

1987 ஆம் ஆண்டு முதல் முதலில் மலையகத்தில் தனிவீடுகள் அமைக்கும் பணியை இ.தொ.கா. ஆரம்பித்து வைத்ததுடன், கல்வி மற்றும் சுகாதார அபிவிருத்திகளையும் முன்னெடுத்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்கள் மலையகத்தில் முழுமையாக வெற்றியடைய இ.தொ.கா. தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றும் என்றும் தேசிய நீரோட்டத்தில் மலையக மக்களையும் இணைத்து முழுமையான அபிவிருத்தியுடன் முன்னோக்கி கொண்டு செல்ல அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா, ஆறுமுகன் தொண்டமான் ஐயா ஆகியோர் பாடுபட்டதை குறிப்பிட்டாக வேண்டும்.

அவர்கள் அன்று காட்டிய வழியில் இ.தொ.கா. என்றுமே முன்னின்று செயற்படும் என இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (05)

# அலைபேசிகளைத் திருடி விற்கும் கும்பல் சிக்கியது

## கல்முனையில் சம்பவம்



நீண்ட காலமாக கைத் தொலைபேசிகளை திருடி விற்பனை செய்து வந்த கும்பல் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பல்வேறு இடங்களில் தொலைபேசிகள் சூட்சுமமாகக் களவாடி செல்லப்பட்டுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் சம்பவத்துடன் தொடர்புடைய 2 சந்தேக நபர்களை பொலிஸ் விசேட பிரிவின் தகவல் ஒருங்கிணைப்பிற்கமைய திங்கட்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

இந் நடவடிக்கையில் கைதாகிய 2 சந்தேக நபர்களும் தடுத்து வைக்கப்பட்டு ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொலிஸாரால் விசாரணைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விசாரணையின் போது கைதானவர்களின் வாக்குமூலத்தின் படி வைத்தியசாலைகள், நோயாளிகள், பார்வையாளர்கள் ஆகியோரை பிரதானமாக இலக்கு வைத்து சக நோயாளர்களாகவும் சிற்றுழியர்களாகவும் நடித்து சூட்சுமமாக இந்தக் கைத்தொலைபேசிகளை திருடியுள்ளனர்.

மேலும் குறித்த திருட்டு சம்பவத்தில் தலைவராக 32 வயதுடைய சந்தேக நபர் செயற்பட்டு வந்துள்ளமையுடன் கல்முனை புறநகர் பகுதியில் ஆசிரியர் ஒருவரை இரண்டாவது திருமணம் செய்து இத்திருட்டு குழுவை வழிநடத்தியுள்ளார். மற்றைய சந்தேக நபர் கல்முனை மாநகரில் கைத்தொலைபேசி கடையை நடத்தி வருபவராவார். இவர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் குறித்த கைத்தொலைபேசி திருட்டு கும்பலால் களவாடப்பட்டு வருகின்ற கைத்தொலைபேசிகளை கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தவிர குறித்த சந்தேக நபர்கள் பொது இடங்கள் கல்முனை பிரதான பஸ் நிலையம் மற்றும் பஸ்களில் பயணம் செய்பவர்களையும் இலக்கு வைத்து இத்திருட்டை சாதுரியமாக மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன் மண்டூர், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நற்பிட்டிமுனை பகுதியை சேர்ந்தவர்கள் இக்கைத் தொலைபேசி திருட்டினால் தமது பெறுமதியான கைத்தொலைபேசிகளை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பொலிஸாரால் தற்போது கைப்பற்றப்பட்டுள்ள தொலைபேசிகளின் பெறுமதி ரூபா 5 லட்சத்துக்கும் அதிக பெறுமதியானவை என்பதுடன் சில கைத்தொலைபேசிகளின் உரிமையாளர்கள் தத்தமது தொலைபேசிகளை இனங்கண்டு வருகின்றனர்.

எனவே பொதுமக்கள் கடந்த காலங்களில் கைத்தொலைபேசிகளை தொலைத்திருந்தால் தம்மை தொடர்பு கொள்ளுமாறு கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் கேட்டுள்ளார். (05)

# 10,000 தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு

தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக, மாற்று மற்றும் ஒப்பந்த அடைப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது தரவுகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், விரைவில் நியமனங்கள் வழங்கப்படும் எனவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைப்புகளில் தற்போது 12 ஆயிரம் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன. அமைச்சரவையின் அங்கீகாரத்தை அடுத்து தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளன என ஜானக வக்கும்புர கூறினார்.

தற்போது உள்ளூராட்சி அமைப்புகளில் தற்காலிக பணியாளர்கள், மாற்று பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் என சுமார் 10 ஆயிரம் பேர் பணியாற்றி வருகின்றனர். (05)

# ஸ்பா என்ற பெயரில் இயங்கிய விபச்சார விடுதி சிக்கியது

## கொள்ளுப்பிட்டியில் ஆறு பேர் கைது

கொள்ளுப்பிட்டியில் ஸ்பா என்ற போர்வையில் இயங்கிவந்த விபச்சார விடுதியை சுற்றிவளைத்த பொலிஸார் நான்கு தாய்லாந்து பெண்கள் உட்பட ஆறு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபச்சார விடுதியின் முகாமையாளர், கொழும்பில் வசிப்பவர் மற்றும் பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொரு ஆண் மற்றும் 37 முதல் 40 வயதுடைய தாய்லாந்து பெண்கள் நான்கு பேர் இந்தச் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (05)

# சிறுமியைக் கடத்த முயன்றவரை மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்

## காலிமுகத்திடலில் சம்பவம்

கொழும்பு காலிமுகத்திடல் கடற்கரைக்கு தாய் மற்றும் தந்தையுடன் வந்த ஏழு வயது சிறுமியைக் கடத்திக்கொண்டு தப்பி ஓட முயன்றதாக கூறப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தங்கள் மகளை ஒருவர் கடத்திவிட்டு ஓட முயன்றபோது சிறுமியின் பெற்றோர் உதவி கேட்டு அலறியடித்தனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உடப்புசல்லாவ பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)

# கதிரவெளி விக்னேஸ்வரா நூற்றாண்டு விழா நிகழ்வு



கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கதிரவெளி விக்னேஸ்வரா மகாவித்தியாலய நூற்றாண்டு விழா வித்தியாலய அதிபர் எஸ். அரசரெட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்டு கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு என பல துறைகளிலும் தமது சாதனைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அதிதிகள் கௌரவிப்பின் போது நூற்றாண்டு நினைவுமலரான 'கதிராழி' எனப்படும் நூலும் வெளியிட்டுவைக்கப்பட்டது.

மேலும் குறித்த பாடசாலையில் நிலவிவரும் பௌதீக மற்றும் மனிதவள தேவைகள் தொடர்பிலும், ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பிலும் அந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாருடன் இணைந்து ஆராய்ந்தனர்.

நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், பூ. பிரசாந்தன், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் ஆனந்தரூபன் உட்பட பிரதேச செயலாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வுநிலை அதிபர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# அம்பாறை மாவட்டத்தில் மொழியுரிமை பரப்புரை





மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தால் அம்பாறை மாவட்டத்தில் சகவாழ்வு சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் ஒரு செயற்பாடாக மொழியுரிமை பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

மாவட்டத்திலுள்ள அரச, தனியார் காரியாலயங்கள், பொது இடங்கள் போன்றவற்றுக்கு நேரடியாக சென்று துண்டு பிரசுரங்களை விநியோகித்தும், பதாதைகளை காட்சிப்படுத்தியும் இந்த விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்படுகின்றது.

மனித அபிவிருத்தி ஸ்தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரசார நிகழ்வில் சகவாழ்வு சங்கங்களின் பிரதிநிதிகளாக எம்.ரிலீபா பேகம், பி.மனோரஞ்சினி, எஸ்.தங்கராணி, இசட்.எம். நஸ்கான் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (05)

# ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் நியமனம் நேர்முக பரீட்சைக்கான பயிற்சிபட்டறை



அண்மையில் வெளியாகிய கிழக்குமாகாண ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் நியமனத்துக்கான திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பரீட்சார்த்திகளுக்கான விடே பயிற்சிபட்டறையொன்றை கல்முனையன்ஸ் போரம் அண்மையில் ஏற்பாடுசெய்திருந்தது.

கமு/கமு/அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒட்டமாவடி தொடக்கம் அக்கரைப்பற்று வரையான பிரதேசங்களிலிருந்து நேர்முகப்பரீட்சைக்காக தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

இந்தப் பயிற்சிபட்டறையில் குறித்த நேர்முகப் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும், பயிற்சிகளும் அனுபவமிக்க வளவாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டதோடு மாதிரி நேர்காணலும் நடத்தப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது விடே அம்சமாகும்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மேற்படி திறந்தபோட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்களை கல்முனையன்ஸ் போரம் இலவசமாக ஏற்பாடு செய்திருந்ததோடு குறித்து வழிகாட்டல் வகுப்புக்களில் கலந்துகொண்ட 11 மாணவர்கள் தேர்வில் சித்திடைந்து நேர்முகப்பரீட்சைக்கு தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2023இல் வெளியிடப்பெற்றது.